# மெட்ரோ ரயிலில்

# தினசரி 1 லட்சம் பேர் பயணம்

## நிர்வாகம் தகவல்

சென்னை, மார்ச் 14: மெட்ரோ ரயிலில் தினசரி பயணம் செய்வோரின் எண்ணிக்கை 1 லட்சத்தை எட்டியுள்ளது.

சென்னை வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான மெட்ரோ ரயில் நீட்டிப்பு சேவையை பிரதமர் மோடி கடந்த பிப்ரவரி 14ம் தேதி தொடங்கி வைத்தார். முன்னதாக 40 பேர் வரையில் மட்டுமே நாள்தோறும் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தி வந்தனர். நாள்தோறும் மெட்ரோ ரயிலில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வந்தது.



இதையடுத்து, நாள்தோறும் 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் பேர் வரையில் சேவையை பயன்படுத்தி வந்தனர். இந்தநிலையில், தற்போது நாள்தோறும் ஒரு லட்சம் பேர் வரையில் இந்த மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தி வருவதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது. அதன்படி, சாதாரண நாட்களில் 75 ஆயிரம் முதல் 90 ஆயிரம் பேர் வரையிலும், சனி, ஞாயிறு மற்றும் விழா நாட்களில் 1 லட்சத்திற்கு மேற்பட்டோரும் சேவையை பயன்படுத்தி வருகின்றனர்.

அதிகபட்சமாக கடந்த 8ம் தேதி 1 லட்சத்து 942 பேரும், 11ம் தேதி 92 ஆயிரம் பேரும் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர். வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோநகர் வரையிலான நீட்டிப்பு பாதையில் நாள்தோறும் 15 ஆயிரம் முதல் 22 ஆயிரம் பேர் வரையில் பயன்படுத்தி வருகின்றனர். வரக்கூடிய நாட்களில் இது அதிகமாகும் என எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.